No. of Printed Pages : 3

**BESE-046**

00978

# இளநிலை கல்வியியல் பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## June, 2018

## BESE-046 : தமிழ் கற்பித்தல்

## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

(ii) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பீடு சமம்.

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

   பள்ளி நூலகத்தின் அவசியம் யாது ? பள்ளி நூலகமும் மொழியாசிரியர்களின் கடமை-களையும் எடுத்துரைக்கவும்.

   **அல்லது**

   விளையாட்டு முறை என்றால் என்ன ? இம் முறை எந்த நிலைக்குச் சிறப்பாக அமையும் ? விளயாட்டு முறையை எவ்வாறெல்லாம் பயன் படுத்துவீர் என்பதனை விளக்குக.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு **மிகாமல்** விடை தருக.

நிரல்வழி கற்றல் என்றால் என்ன ? அதன் அடிப்படைத் தன்மைகள் யாவை ? இதன் சிறந்த பாடத்திட்டம் எத்தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும் ? இக்கற்பித்தலில் கவனத்திற்குரிய படிகளை விளக்குக.

**அல்லது**

படித்தல் என்றால் என்ன ? படித்தல் என்றும் திறனை வரையறை செய்து, அத்திறனால் நிறைவேறக் கூடிய நன்னோக்கங்களை விளக்குக.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் எவையேனும் **4** வினாக்களுக்கு **150** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்க.

(a) மொழியின் எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்கும் முறைகளை விளக்குக.

(b) துணைப்பாடத்தை எவ்வாறு நடத்த-வேண்டும் ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(c) நுண் நிலைப் பயிற்சி என்றால் என்ன ? இதன் படிகள் யாவை ? இப்பயிற்சி எவ்வாறு மேற்கொள்ளப்படும் ?

(d) நல்ல பாட நூலின் பண்புகளில் சிலவற்றைக் கூறுக.

(e) மின்னட்டைகளின் பயன்களை உதாரணத்துடன் கூறுக.

(f) பாடத்திட்டத்தின் வகைகள் யாவை ? நுண்நிலை கற்பித்தலுக்கும் வகுப்பறை கற்பித்தலுக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

(g) தகவல் தொழிற் நுட்பங்களை (ICT) எவ்வாறு தமிழ் பயிற்றுவிக்க பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

(h) நல்ல அடைவுத்தேர்வு என்பது எப்பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் ?

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை ? இலக்கணம் பள்ளிகளில் வெறுக்கப்படுவது ஏன் ? உமது வகுப்பறை கற்பித்தலின் போது எந்த முறை பின்பற்றப்படுகிறது? விதி-வருமுறை கற்பித்த போது நீவீர் கண்ட நிறைகுறைகளை விளக்குக.